**செ.வெ. எண்: 439** **நாள்: 12.7.2011**

## பத்திரிக்கை செய்தி

தற்பொழுது கைத்தறி நெசவாளர்கள் மற்றும் பெடல்தறி நெசவாளர்கள் உற்பத்தி செய்யும் இலவச வேட்டி சேலை இரங்களை கொள்முதல் செய்ய தலைமை அலுவலகம் உத்தரவு பிறப்பித்து அதன் பின்னர் கொள்முதல் செய்வது நடைமுறையில் இருந்து வருகிறது. இதனால் 365 நாட்களும் கைத்தறி நெசவாளர்களுக்கு வேலை என்ற கொள்கை காற்றில் பறக்க விடப்பட்டுள்ளது. எனவே இனி வரும் காலங்களில் கீழ்கண்ட நடைமுறையைப் பின்பற்றத் தேவையான அலுவலக நடைமுறை உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது.

1. கைத்தறி மற்றும் பெடல் தறி மூலம் உற்பத்தி செய்யப்படும் இலவச வேட்டி சேலை இரகங்கள் உற்பத்தி செய்த ஏழு நாட்களுக்குள் தர ஆய்வு செய்து கொள்முதல் செய்யப்படவேண்டும். இதனால் மேலாளர் (வடிவமைப்பு மற்றும் உற்பத்தி) / அரசுத் திட்டம் மற்றும் கொள்முதல் மேற்பார்வையாளர்களுக்கு கூடுதல் பணிச்சுமை ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே மேற்கூறிய தர ஆய்வினை மண்டல சேமிப்பு கிடங்கு / இலவச வேட்டி சேலை சேமிப்பு கிடங்குகளிலேயே தர ஆய்வு செய்து கொள்முதல் செய்யப்படவேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

2. கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்களுக்கு இலவச வேட்டி சேலை உற்பத்திக்குத் தேவையான அளவிற்கு உடனுக்குடன் நூல் வழங்க உத்தரவிடப்படுகிறது. அதாவது முன்பணமாக நூல் வழங்கும் பொறுப்பை இனிவருங்காலங்களில் கோ–ஆப்டெக்ஸ் நிறுவனத்திற்கு பதில் இயக்குநர், கைத்தறி மற்றும் துணிநூல் துறை மூலம் வழங்கப்பட பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. அந்தப் பரிந்துரை ஏற்கப்படும்வரை கோ–ஆப்டெக்ஸ் நிறுவனம் இலவச வேட்டி சேலைத் திட்டத்தினை செயல்படுத்த கைத்தறி நெசவாளர் கூட்டுறவு சங்கங்களுக்கு நூல்கள் உடனுக்குடன் முன்பணமாக வழங்க வழிவகை செய்து இலவச வேட்டி சேலை உற்பத்தி வருடம் முழுவதும் செயல்படும்படி பார்த்துக் கொள்ள வேண்டும்.

3. ஒவ்வொரு வருடமும் 6 மாதங்களுக்கு மட்டுமே இலவச வேட்டி சேலை இரகங்கள் கொள்முதல் செய்யப்படுவதால் கைத்தறி மற்றும் பெடல்தறி நெசவாளர்கள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகின்றனர். இது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக இல்லை. எனவே இன்றைய தேதியிலிருந்து கைத்தறி மற்றும் பெடல் தறியில் உற்பத்தியாகும் இலவச வேட்டி சேலை இரகங்கள் ஒவ்வொரு நாளும் தொடர்ந்து ஆண்டு முழுவதும் கொள்முதல் செய்யப்பட வேண்டும்

இன்றைய தேதியிலிருந்து இந்த அலுவலக நடைமுறை உத்தரவு நடைமுறைக்கு வருகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர்,** செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை